# தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பிரிவு

*ஏப்ரல்* 2020

திபி 2051 . மலர் 2 . இதழ் 4

# நாம் தமிழர் கட்சி



# பதிப்புரை

## இவ்விதழில்

1. கொரோனாவும் கோமியமும்
2. தமிழ் தேசியம்
3. மக்கள் களம்

உலகம் முழுவதும் கொரானா பெருந்தொற்று நோய் மிகப் பெரும் அச்சுறுத்தலாக இருந்து வருகிறது. முழுமையாக தடையில் இந்தியா உள்ளது. இதன் நீண்டகால விளைவுகளைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்

இக்கடினமானச் சூழலில் தன்னலமற்றுப் பணியாற்றிவரும் மருத்துவப் பணியாளர்களுக்கும் தூய்மைப் பணியாளர்களுக்கும் நம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வோம்

இதுவும் கடந்து போகும்

ஆசிரியர் குழு

> “எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்திலிருந்தே பிறக்கின்றது."
>
> \- தலைவர் பிரபாகரன்

உலக வல்லாதிக்க போட்டியில் சீனா தன்னை நிலைநிறுத்திக் கொண்டது.

ஐரோப்பிய நிலைகுலைந்து போயுள்ளது.

வல்லரசு அமெரிக்காவின் நிலையோ பரிதாபம்.

பல நாடுகள் செய்வதறியாது தவித்துக் கொண்டிருக்கின்றன.

கொரனாவின் தாக்கத்திலிருந்து மீளும் முனைப்பில் அனைத்து நாடுகளும் பாதுகாப்பு உபகரணங்களையும் மருந்துகளையும் மருத்துவர்களையும் தயார்படுத்திக் கொண்டு மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துகின்றன.

இந்திய ஒன்றியத்தில், மாநிலங்கள் ஊரடங்கை அறிவித்து பிரதமரின் அறிவிப்பை எதிர்நோக்கியிருந்தன.

மத்திய அரசிடம் இருந்து பாதுகாப்பு உபகரணங்களையும் மருந்து கையிருப்பு களையும் நிதிநிலையையும் எதிர்பார்த்த மாநில அரசுகளுக்கும் மக்களுக்கும் ஏமாற்றம் அளிக்கும் வகையில் ஆருடம் பார்த்து அறிவிப்பு செய்தர் மோடி.



முதல் அறிவிப்பாக வீட்டிற்கு வீட்டின் வராண்டாவில் நின்று தங்கள் கைகளை தட்டி மருத்துவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்றார்.

10 நாளுக்கு பிறகு மோடி மற்றொரு அறிவிப்பு இந்திய மக்கள் அனைவரும் விளக்கு போட்டு கொரனாவை துரத்துங்கள் என்றார். இம்முறை ஏமாற்றத்துடன் பயமும் தொற்றிக் கொண்டது மக்களுக்கு

மத்திய அரசின் கவனம் ஒழிப்பு பணியில்  முட்டாள்தனத்தின் உச்சமாக அவர்களின் கோமூத்திரம் கூட்டம், மாட்டு சிறுநீர் மூலம் கொரனாவை ஒழிக்கலாம் என்றனர். இந்த கூட்டத்தை ஒருங்கிணைத்த பாஜக நிர்வாகிகள் நின்றனர்.

இதன்மூலம் இந்திய குடிமகன்கள் ஆகிய நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் கோமியம் கொரனாவிடமிருந்து எந்த அளவிற்கு நம்மை காப்பாற்றும் என்பது உண்மையோ அந்த அளவிற்கு உண்மை மோடி அவர்கள் இந்திய தேசத்தை காப்பாற்றுவார் என்பதும்.

மாநில அரசுகள் கடுமையான நிதிச் சூழலில் நடவடிக்கைகளை எடுத்துவரும் நிலையில் குழப்பமான நிலையிலேயே ஒன்றியரசு உள்ளதாகத் தோன்றுகிறது.

ஏற்கனவே, தமிழகத்திற்கு வரிப்பங்கீடு குறைக்கப்பட்டுவரும் நிலையில், கொரனா நிதியிலும் மிகக் குறைந்த அளவே கொடுக்கப்பட்டுள்ளது.

| தமிழ்நாடு அரசு கேட்ட நிதி | | மத்திய அரசு ஒதுக்கிய நிதி | |
|---|---|---|---|
| 2016 - வர்தா புயல் | 22573 கோடி | 266.17 கோடி | 1.18% |
| 2016 - கடும் வறட்சி | 39565 கோடி | 1748.28 கோடி | 4.42% |
| 2017 - ஒகி புயல் | 5255 கோடி | 133 கோடி | 2.53% |
| 2017 - கஜா புயல் | 17160 கோடி | 1146 கோடி | 6.51% |
| 2020 - கொரோனா | 13000 கோடி | 510 கோடி | 3.88% |

நாம் தமிழர் கட்சி – இணையதளப் பாசறை
#NTKITWING #Naamtamilarkatchi

ஒன்றிய அரசு மீண்டும் மீண்டும் தமிழகத்தைப் புறக்கணிப்பதையே இதைக் காட்டுகிறது.

தமிழக அரசு ஒப்பந்தம் செய்திருந்த ஆய்வுக் கருவிகளும் தமிழகத்திற்கு வந்துசேர ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பொருளாதாரம் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வரும் நிலையில் அதைப் பற்றிய எந்த அறிவிப்பும் இதுவரை இல்லை.

இந்த மூடலால் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கும் தினக்கூலித் தொழிலாளர்களுக்கு தீர்வு இல்லை.

பசியால் பலர் வாடும் கொடுமையையும் பார்க்கிறோம்.

எந்தவித திட்டமிடலும் இல்லாமல், அரசுகள் தடுமாறி வருவதையே அவர்கள் நடவடிக்கைகள் காட்டுகின்றன.

**வணிகப் பெரு நிறுவனங்களுக்கு 2014-15ல் ரூ.65,607 கோடியில் தொடங்கி, 2018-19ல் ரூ.1,08,785 கோடி வரை தள்ளுபடி செய்துவிட்டு தற்போது மத்தியப் பேரிடர் மேலாண்மை நிதிக் கணக்கில் வெறும் ரூ.3,800 கோடிகளை வைத்துக்கொண்டு மீத செலவை மாநிலங்களிடம் தள்ளிவிடுவது ஏன்?**

**நாம் தமிழர் கட்சி**
தகவல் தொழில்நுட்பப் பாசறை

**@NTK**
IT WING

தமிழ் தேசியம் என்பது தமிழர்களுக்கான சுய உரிமையை நிலைநாட்டல்.

பல நூறு ஆண்டுகளாக பல்வேறு மொழிகளை தாய்மொழியாகக் கொண்ட பிற இனத்தைச் சார்ந்தவர்கள் தமிழகத்தை ஆண்டு மொழி, கல்வி, சமூகம், பொருளாதாரம், அரசியல் போன்ற பல்வேறு தளங்களில் தமிழர்களை அடிமைப்படுத்தி 'தமிழன் இப்படி ஒரு அடிமை வாழ்வு போல் ஓர் இனிமையான வாழ்வு இந்த உலகத்தில் வேறு எங்கும் இல்லை' என்று தமிழர்கள் எண்ணுமளவிற்கு உளவியல் ரீதியாக தமிழர்களுக்கு சிந்தனையிட்டு சிதறுண்டு கிடக்கும் தமிழர்களை தாம் தமிழர்கள் என்று தமக்குரிய வரலாற்று அடையாளத்துடன் புத்துணர்ச்சி பெற்று எழுச்சியோடு நிமிர்ந்து நிற்கும் சொல் தமிழ் தேசியம்.


உலகிலுள்ள அனைத்து தேசிய இனங்களும் தங்களுக்கான அடையாளங்களையும் வரலாற்றையும் தெரிந்து கொண்டால்தான் தன்னினம் சுய நிர்ணய உரிமை பெற்று தன்மானத்தோடு வாழ்வதற்கான அனைத்து உரிமைகளையும் பெற்று அதனைத் தக்க வைத்துக் கொள்ளவும் முடியும்.
தமிழ், தமிழர், தமிழ் தேசியம் என்பவை தமிழர்களுக்கான தன்னுரிமை நிலை நாட்டலே, என்பதை தமிழர்கள் ஒவ்வொருவரும் உணர வேண்டியது அவசியம்.

தமிழ் தேசியத்தை எதிர்ப்பது என்பது தமிழர்கள் தங்களுக்கும் தங்களுடைய தலைமுறையினருக்கும், தமிழினத்திற்கும், தமிழ் நாட்டிற்கும் புரியும் தன்னின துரோகம் மற்றும் தேசத்துரோகம் என்று வரையறை செய்யலாம். தமிழன் தமிழ் தேசியம் எனும் தன் இன அடையாளத்தை உணர்ந்தும் உணராமல் போல் நடிப்பதும் சாதாரணமான நுகர்வு வாழ்க்கையில் ஈடுபட்டு அதை மட்டுமே பெரிதாக கருதுவதும் அந்த அறியாமையால் தமிழ் தேசத்தின் விடுதலைக்கு ஒத்துழைக்காமல் இருப்பதும் தமிழ் தேசிய இன மக்களின் உள்ள ஊனத்தைச் சுட்டிக்காட்டுகின்றன.
தமிழர்கள் தம் தாயகத்தில் பிழைக்க வழி இல்லாமல் மற்ற மாநிலங்களுக்கும் நாடுகளுக்கும் பிழைக்கச் சென்று அந்நாட்டு மக்களால் துன்புறுவதையும்

வதைபடுவதையும் அன்றாட நிகழ்வுகளில் ஊடகங்கள் வாயிலாக அறிகிறோம்.

தமிழ்தேசிய மக்கள் அழிந்து கொண்டிருக்கிறார்கள். சாதியும் மதமும் தமிழினத்தை சுருக்கி எதிரிகள் நம்மை அழிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கும் வடிகால்வாய்கள் ஆகும். தமிழ்த்தேசியம் என்ற சொல் ஒருங்கிணைந்த அந்த குறிப்பிட்ட நிலப்பரப்பில் உள்ள வடிகால்வாய்களை உடைத்துக்கொண்டு வெள்ளம்போல் தமிழர்கள் ஒன்றிணைந்து பயணிக்க வழிவகை செய்யும். ஒன்றிணைவோம் நாம் தமிழராய்.

- உஷா கோபாலகிருஷ்ணன்



NTK IT WING

அச்சுறுத்தும் கொரொனோ நோய்த்தொற்று

## மத்திய அரசுக்கு

# சீமான் சரமாரி கேள்விகள்

- கொரொனோ நோய்த்தொற்று சீனாவிலிருந்து பரவத்தொடங்கி உலக நாடுகளை ஆட்கொள்ளத் தொடங்கியிருந்தது. மற்ற நாடுகளை பார்த்து அதன் வீரியத்தை உணர்ந்த தொடக்கக் காலக்கட்டத்திலேயே முறையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும், தகுந்த முன்னேற்பாடுகளையும் செய்ய மத்திய அரசு தவறவிட்டது ஏன்?
- கையுறையும், முகக்கவசமும், பாதுகாப்பு உபகரணங்களுமில்லாது நோய்த் தொற்றால் மருத்துவர்களும், செவிலியர்களும் பாதிக்கப்படும் பேராபத்து இருந்தபோது அதனை வழங்க ஏற்பாடு செய்யாது அவர்களுக்காக கைதட்ட சொன்னதால் வந்த பயன் என்ன?
- நாடு முழுமைக்கும் கோடிக்கணக்கான அடித்தட்டு, நடுத்தர வர்க்க மக்கள் அடுப்பில் நெருப்பேற்ற வழியில்லாது நிற்கையில் விளக்கில் நெருப்பேற்றச் சொன்ன வெற்றுச்சடங்கால் விளைந்த நன்மை யாது?
- முறையான முன்னறிவிப்பில்லாது அறிவிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவால் பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்தியாவின் பல மாநிலங்களிலும், உலகின் பல நாடுகளிலும் உண்ண உணவு, இருக்க இடமின்றி பாதுகாப்பில்லாது பயத்தோடு சிக்கி அகதியாய் தவிக்கும் மக்களை மீட்க எவ்வித செயல்திட்டங்களையும் இதுவரை அறிவிக்காதது ஏன்?
- தினமும் வீட்டில் இராமாயணம், மகாபாரதம் எனத் புராணத் தொடர்களைப் பார்ப்பதைப் பெருமையோடு பதிவு செய்கிற ஆட்சியாளர் பெருமக்கள், இந்த பேரிடர் காலத்தில் தங்கள் ஆட்சியின்கீழ் வீடற்ற ஏழை மக்கள் படும்பாடுகளை எப்போது பார்க்கப்போகிறார்கள்?
- அந்நிய நாடுகளையே நம்பி தனியார்மய, தாராளமய, உலகமய பொருளாதாரக் கொள்கைகள் மூலம் நாட்டையே சந்தைப்படுத்திவிட்டு மெல்ல மெல்ல வீழ்ந்து கொண்டிருந்த இந்திய பொருளாதாரம் இப்போது ஒரே அடியாக அதலபாதாளத்திற்கு போனபிறகு தற்சார்புபற்றிப் பேசும் பிரதமர் இதற்குமுன் ஒருமுறைகூட அதுகுறித்து சிந்திக்கத் தவறியது ஏன்?
- 80 கோடி மக்களே அரசிடம் உதவியை எதிர்பார்த்து நிற்கையில் அவர்களிடமே போய் நிதி கேட்டு நிற்பது என்ன மாதிரியான நிர்வாகச் செயல்பாடு?
- வணிகப் பெரு நிறுவனங்களுக்கு 2014 - 2015ல் ரூ.65,607 கோடியில் தொடங்கி, 2018-2019ல் ரூ.1,08,785 கோடி வரை தள்ளுபடி செய்துவிட்டு தற்போது மத்தியப் பேரிடர் மேலாண்மை நிதிக்கணக்கில் வெறும் ரூ.3,800 கோடிகளை வைத்துக் கொண்டு மீதசெலவை மாநிலங்களிடம் தள்ளிவிடுவது ஏன்?
- மாநிலங்களின் சுயாட்சி உரிமைக்குரல்கள் எழுந்தபோதெல்லாம் அதனைக் கண்டுகொள்ளாது காலில் போட்டு மிதித்துவிட்டு, ஜிஎஸ்டி உள்ளிட்ட வரிகள் மூலம் மாநிலங்களின் பெரும்பான்மையான நிதியாதாரங்களைப் பறித்துக் கொண்ட மத்திய பாஜக அரசு, தற்போது இந்தப் பேரிடர்காலச் சுகாதார முன்னெடுப்புகளுக்கான நடவடிக்கைகளை மட்டும் முழுக்க முழுக்க மாநில அரசின் மீது சுமத்திவிட்டு தமது பொறுப்பிலிருந்து நழுவுவது ஏன்?
- பணமதிப்பிழப்பு, ஜிஎஸ்டி வரி உள்ளிட்ட தவறான பொருளாதாரக் கொள்கைகளால் ஏற்பட்ட தொழில் முடக்கம், வேலையிழப்பு, பொருளாதார மந்தம் ஆகியவற்றால் கேள்விக்குறியான நாட்டு மக்களின் எதிர்காலம், தற்போது கொரோனா நோய்த்தொற்றுக் காரணமாக ஏற்பட்டுள்ள முடக்கத்தால் முற்றிலுமாக இருளத் தொடங்கியுள்ளது. ஊரடங்கு முடிந்த பிறகு சிறு, குறு தொழில் முனைவோர் உள்ளிட்ட பொருளாதாரம் சீர்குலைந்த ஏழை, எளிய, நடுத்தர மக்களின் வாழ்வாதாரத்தை மீட்டுருவாக்கம் செய்ய அரசு முன்னெடுக்க தொடங்கியுள்ள திட்டங்கள் என்ன?



நாம் தமிழர் கட்சி - தகவல்தொழில்நுட்பப் பாசறை
#NTK IT WING #Naamtamilarkatchi / www.naamtamilar.org

இராவணன் குடில்
கதவு எண். 8, மருத்துவமனை சாலை, செந்தில் நகர், போரூர், சென்னை - 600116.
itew@naamtamilar.org | www.naamtamilar.org | +91 89398 66242